தனிகவனம் / அவசரம்

அனுப்புநர்:

திரு.அ.அப்துல் முனீர். பி.காம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர். (மு கூ பொ)

பெறுநர்:

1. முதன்மைக் கல்வி அலுவலர்,
   வேலூர்.
2. மாவட்ட கல்வி அலுவலர்,
   வேலூர்.

ந.க.எண். கே6/3390/2021, நாள்: .12.2021.

அய்யா,

பொருள் : ஆதிதிராவிடர் நலம் - கல்வி உதவித்தொகை - வேலூர் மாவட்டம் - 2021-2022 ஆம் கல்வியாண்டிற்கான ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ மாணாக்கர்களுக்கு (SC / ST / SCC) - ப்ரி மெட்ரிக் (10) மற்றும் போஸ்ட் மெட்ரிக் (12) கல்வி உதவித்தொகை - **புதுப்பித்தல் பதிவேற்றத்திற்கான இணையதளம் திறக்கப்பட்டுள்ளது** - பள்ளிகளுக்கு தகவல் தெரிவிக்க கோருதல் - தொடர்பாக.

பார்வை : ஆணையர், ஆதிதிராவிடர் நல ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை-5, அவர்களின் மின்னஞ்சல் நாள்: 20.12.2021.

*****

பார்வையில் காணும் ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்களின் செய்தியின்படி 2021-2022 ஆம் கல்வியாண்டிற்கான ப்ரிமெட்ரிக் இணையதள கல்வி உதவித்தொகை புதுப்பித்தல் - 10 ஆம் வகுப்பு மற்றும் போஸ்ட்மெட்ரிக் இணையதள கல்வி உதவித்தொகை புதுப்பித்தல் - 12 ஆம் வகுப்பு புதுப்பித்தல் பணியினை இணையதள கல்வி உதவித்தொகை **புதுப்பித்தல்** பணியினை முடிக்க **20.12.2021** முதல் இணையதளம் திறக்கப்பட்டு **05.01.2022** மாலை **6.00** மணிக்குள் நிறைவு செய்ய கோரப்பட்டுள்ளது. எனவே, புதுப்பித்தல் பணியினை எந்த வித பிழையில்லாமல் செம்மையாக முடித்து **Print For Despatch** நகலை வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் **31.12.2021**-க்குள் ஒப்படைக்க அனைத்து அரசு / அரசு உதவிபெறும் - தனியார் / ஆதிதிராவிடர் நல உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களை அறிவுறுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். **Print For Despatch** நகலினை இவ்வலுவலகத்தில் சமர்பித்தால்

Scanned with CamScanner

மட்டுமே அப்பள்ளியின் விண்ணப்பங்கள் ஆதிதிராவிடர் நல ஆணையர் அலுவலகத்திற்கு இணையதளத்தில் **Forward** செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், புதுப்பித்தல் இன மாணாக்கர்களுக்கு விடுதி சார்பான விவரங்கள், சேமிப்பு கணக்கு விவரங்கள் மற்றும் ஆதார் எண் விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை பள்ளிகள் கூர்ந்தாய்வு செய்து, மாற்றங்கள் ஏதுமிருப்பின் அதனை சரிசெய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். புதுப்பித்தல் செய்ய இறுதி நாள் என நிர்ணயிக்கப்பட்ட 05.01.2022 காலகெடுவிற்குள் தகுதியுள்ள அனைத்து விண்ணப்பங்களையும் புதுப்பித்தல் செய்யவும், குறித்த காலகெடுவிற்குள் புதுப்பித்தல் செய்யப்படவில்லை எனில், அதன்கான முழு பொறுப்பினையும் அப்பள்ளியே ஏற்றுக்கொள்ள நேரிடும் என்றும், மாணாக்கர்கள் சார்பான கல்வி உதவித்தொகையினை பள்ளி நிர்வாகமே ஈடுசெய்து கொள்ள வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

22/12/21

For மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர்.

கு.ஜெ
21/12/21

Scanned with CamScanner